RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் மெய்யியல்

**மா. சங்கரேஸ்வரி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி (தன்னாட்சி), கோவில்பட்டி, தமிழ்நாடு, இந்தியா

# Philosophical Perspectives in Sangam Literature

**M. Sankareswari** [a, *]

[a] Department of Tamil, G. Venkataswamy Naidu College (Autonomous), Kovilpatti, Tamil Nadu, India

* Corresponding Author:
sankariphd86@gmail.com

**ABSTRACT**

Philosophy encompasses enduring and fundamental ethical principles that are essential for a meaningful human life. It seeks to understand the nature of reality, truth, and existence. The people of the Sangam period are represented in literature as having structured their lives according to such an understanding of reality and ethical truth. Both their inner life (akam) and public life (puram) reflect a strong sense of moral consciousness and authenticity. The people of the Sangam age are portrayed as living with an awareness of wrongdoing, social censure, and moral responsibility. They cultivated a spirit of helping others, while hospitality and generosity occupied prominent positions among their social virtues. Hospitality was not regarded merely as a social obligation; rather, there was a strong ethical conviction that no person should remain hungry. Food was therefore offered generously to those who sought their help. The Sangam people also recognized the impermanent nature of material possessions and the human body. This awareness encouraged them to perform actions that would benefit others and endure beyond their individual lives. Sangam literature records, for example, the advice given by poets to rulers to establish and maintain water resources that would benefit agriculture and sustain living beings. Such references demonstrate an understanding of social responsibility and the importance of preserving natural resources for the welfare of the community. Furthermore, Sangam literature highlights the importance of friendship, generosity, courage, honour, and fame, portraying these not merely as personal virtues but as values connected with social responsibility and collective welfare. The ancient Tamils are represented as cultivating a spirit of living not exclusively for themselves but also for the benefit of others. Thus, Sangam literature reflects a distinctive philosophical outlook grounded in truth, ethical conduct, hospitality, generosity, social responsibility, impermanence, friendship, courage, and concern for the welfare of living beings. This study examines these philosophical ideas and demonstrates how Sangam literature functions not merely as a record of ancient Tamil life but also as an important source of ethical and philosophical thought

**Keywords:** Sangam Literature, Philosophy, Metaphysics, Ethics, Hospitality, Generosity.

## முன்னுரை

சங்க காலத்தில் பிறருக்குக் கொடுத்து வாழும் மனஉணர்வு மேலோங்கி இருந்தது. மக்கள், மன்னர்கள், குறுநில மன்னர்கள் என்று மக்கள் முதல் நாட்டை ஆளும் மன்னன் வரை இவ்வுயரிய பண்பு காணப்பட்டது. நல்லறங்களை செய்தால் பயன் கிட்டும் என்று மக்கள் நம்பினர். அதனால் விருந்தோம்பல் செய்வது, பொருள்களை வாhp வழங்குவது என்று பல்வேறு நல்லறங்களை மன்னர்களும் மக்களும் செய்தனர். அதுமட்டுமின்றி நட்பை உயர்வாகவும் பெரிதாகவும் எண்ணினர். மன்னர் - புலவர் என்ற நட்பில் தூய அன்பு வெளிப்பட்டு நின்றது. நட்பிற்காக எதையும் செய்யக்கூடிய துணிவும் மேலோங்கி இருந்ததை சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது.

## விருந்தோம்பல் பண்பு

மனிதன் உயிர் வாழ அடிப்படை தேவைகளுள் ஒன்று உணவு. இவ்வுலகத்தில் பிறந்த யாரும் பசியோடு வாழக்கூடாது என்பது உலகத்தத்துவமாகும். இவ்வுண்மையின்படி சங்க மக்கள் பிறருக்கு வயிறார உணவளித்து மகிழ்ந்தனர். சங்க மக்களின் வாழ்க்கையில் விருந்தோம்பல் பண்பு மேலோங்கி காணப்பட்டது. விருந்தோம்பல் என்பது சுற்றத்தார் அல்லாத வழிப்போக்கர்கள் யாராக இருந்தாலும் முன்பின் தெரியாத மக்களுக்கு விருந்தளிப்பது ஆகும். விருந்தோம்பலின் சிறப்பு யாரும் பசியுடன் இருக்கக்கூடாது என்பதாகும். பசி என்றால் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. பசியில் வாடும் ஒருவர் தனக்கு தேவையான உணவு கிடைக்கவில்லையெனில் அவ்வுணவை எவ்வாறாயினும் பெற்றுக்கொள்ள துடிப்பான். தீய வழியில் செல்ல நேரிடும். தீய வழியில் செல்லாது அறவழிபடுத்துவது விருந்தோம்பலின் ஒரு நோக்கமாகும். சங்க காலத்தில் உணவளிப்பது அறமாகக் கருதப்பட்டது. அதுமட்டுமின்றி மனிதநேயமும் இவற்றுள் அடங்கியுள்ளது எனலாம். இரவில் தூங்கும் முன்பு வழிபோக்கர் யாரேனும் நடந்து வருகிறார்களாக என்று பார்த்துவிட்டு சத்தமிட்டு, கேட்ட பின்பு யாரும் வரவில்லை என்று உறுதி செய்து கொண்டு கதவடைக்கும் பழக்கம் சங்க மக்களிடம் காணப்பட்டதை குறுந்தொகை இலக்கியம் வழி அறிய முடிகிறது. நள்ளிரவு நேரத்திலும் அன்போடும், மகிழ்ச்சியோடும் விருந்தினரை உபசரித்து விருந்தளிப்பதை,

“அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின்” (நற்றிணை,142:9 - 10)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. வினையின் பொருட்டோ வேறு காரணங்களுக்காக தன் ஊரை விட்டு கடந்து வேறு ஒரு ஊருக்கு செல்லும் போது அவர்கள் பசியோடு இருக்கக்கூடாது என்பதுதான் இதன் நோக்கமாகும்.

தன்னை நாடி வந்த புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் மன்னர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் உணவளித்து மகிழ்ந்தனர்.

## ஈதல் அறம்

பிறருக்கு கொடுத்து வாழ்வது ஈகையாகும். தன்னிடம் உள்ள பொருள்களை பிறருக்குக் கொடுத்து உதவ வேண்டும். அதாவது பொருள் இருப்பவர்கள் பொருள் இல்லாதவர்களுக்கு கொடுப்பது கொடை அல்லது ஈதல் ஆகும். பொருள் கொடுப்பவர் பொருள் வாங்குபவரிடம் இருந்து எவ்வித பயனும் எதிர்பார்க்காமல் அளிக்க வேண்டும். பிறரிடம் எதிர்பார்த்து கொடுப்பது கொடையாகாது. பயன் கருதி கொடை அளிப்பது அது தமக்குத் தாமே கொடுப்பதற்கு ஈடாகும். இதனை,

“எமக்கு ஈவோர் பிறர்க்கு ஈவோர்

பிறர்க்கு ஈவோர் தமக்கு ஈப” (புறநானூறு,136:20 - 21)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. இதனையே வள்ளுவரும் வலியுறுத்துவதை,

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை மற்றவர்க்கு” (திருக்குறள்:222)

என்ற குறடிகள் வழி அறிய முடிகிறது. மேலும் இல்லாதவர்களுக்கு கொடுப்பதை தங்கள் கடமையாக மன்னர்கள் கருதினர். வறுமையில் வாடும் மக்கள் தங்களை நாடி வந்தால் அவர்களுக்கு உதவுவது ஒவ்வொருவரின் கடமையாக நினைத்து செய்ததை,

“கொடைக்கடன் இறுத்த அவன் தொல்லோர் வரவும்” (மலைபடு,86)

என்ற அடி வழி அறியலாம். ஒருவன் செல்வங்களை மேன்மேலும் சேர்ப்பதில் ஒருபயனும் இல்லை. அச்செல்வங்களை பிறருக்கு கொடுத்து உதவுவதே சாலச்சிறந்தது ஆகும். ஈதலே அறமாகக் கருதினர். நாட்டை ஆளும் மன்னனாக இருந்தாலும் சாதரண மக்களாக இருந்தாலும் உயிர் வாழ்வதற்கு அடிப்படை தேவை உணவு, உடை ஆகும். ஒருவரிடம் எவ்வளவு பொருள் இருந்தாலும் அவன் உடுத்தக்கூடிய ஆடை மேலாடை, கீழாடை ஆகும். உண்பது குறிப்பிட்ட அளவேயாகும். பொருள் இருந்தாலும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் உண்ண முடியாது. உண்பது, உடுப்பது ஆகிய செயல் இரண்டிலும் அரசனும் ஆண்டியும் சமம் தான். ஆலால் தாம் பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டுவது பிறருக்கு ஈதலே ஆகும் என்று மதுரை கணக்காயனார்,

“உண்பது நாழி: உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே

செல்வத்துப் பயனே ஈதல்

துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறநானூறு, 189: 5 - 8)

என்ற அடிகளில் கூறியுள்ளதை அறிய முடிகிறது. அதுமட்டுமின்றி ஈதல் என்னும் அறத்தை செய்தால் வாழ்வில் இம்மைப்பயனும் மறுமைப்பயனும் கிடைக்கும் என்பது வாழ்வின் திண்ணம் ஆகும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார். இக்கருத்தை அடியொற்றியே

"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்" (நல்வழி,28)

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள் வைப்புழி" (திருக்குறள்,226)

"மேல் உலகம் இல்லெனினும் ஈதலே நன்று" (திருக்குறள்,222)

என்ற அடிகளும் குறிப்பிடுகின்றன. திருக்குறளில் வள்ளுவர் இம்மைப்பயன் இல்லை என்றாலும் கொடுப்பதுதான் நல்லது என்று கூறியுள்ளதையும் அறிய முடிகிறது.

## வள்ளல்களின் தன்மை அல்லது பிறரை ஆதாpத்து போற்றுதல்

மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள் என்று தங்களுக்கென்று ஒரு பகுதியே ஆட்சி செய்தனர். இவர்களில் பிறருக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி வாரி வழங்குவதில் குறுநில மன்னர்கள்(கடையெழு வள்ளல்கள்) சிறந்து விளங்கினர். பேரரசுகளான சேரர், சோழர், பாண்டியர் என்று முடியுடை வேந்தர்கள் இருந்தாலும் புலவர்கள், பாடினி, பாணர்கள், கூத்தர் என்று அனைவரையும் ஆதரித்தவர்கள் குறுநில மன்னர்களே ஆவர்.

தன்னை நாடி வந்தவர்களுக்கு பரிசுகளும் பொருட்களும் வாரி வழங்குபவர் கொடை வள்ளல்கள் என்று கூறுவர். சங்க இலக்கியத்தில் புலவர், பாணர், பொருநர், விறலியர், பாடினியர், கூத்தர் என்று பலர் வள்ளல்களையும் மன்னர்களையும் நாடி பொருள் பெற்றுள்ளனர். ஆற்றுப்படையில் பொருநராற்றுப்படையில் கரிகாற் சோழன் பொருநரையும், சிறுபாணாற்றுப்படையில் நல்லியகோடன் பாணர்களையும் பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையான் பாணர்களையும் மலைபடுகடாமில் நன்னன் சேய் நன்னன் என்பவன் கூத்தரையும் பாதுகாத்து கொடையளித்தாக பகர்கின்றது. வள்ளல்களில் தலையேழு வள்ளல்கள், இடையேழு வள்ளல்கள், கடையேழு வள்ளல்கள் என்று இருந்தனர். சகரன், காரி, நளன், தந்து மாரி, நிருதி, செம்பியன், விராடன் ஆகியோர் முதல் ஏழு வள்ளல்கள் என்பர். அக்குரன், அந்திமான், கர்ணன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன், சந்தன் ஆகியோர் இடையேழு வள்ளல்கள் என்பர். பாரி, காரி, ஓரி, அதியன், பேகன், நள்ளி, ஆய் ஆகியோர் கடையேழு வள்ளல்கள் என்று நிகண்டு கூறுகிறது. இவற்றில் கடையேழு வள்ளல்களைப் பற்றி சங்க இலக்கியம் கூறுகின்றது. இடையேழு வள்ளல்களில் அக்குரன் என்ற வள்ளல் பற்றிய குறிப்பு பதிற்றுப்பத்தில் உள்ளது. கர்ணன் மகாபாரதத்தில் இடம்பெறும் ஈடுஇணையற்ற வள்ளல் ஆவான்.

## பாரியின் கொடைத்தன்மை

கொடையளிப்பதில் பாரியின் கைவண்மையைக் கூறுவர் புலவர்கள். பாரி கபிலரால் அதிகமாகப் பாடப்பட்டுள்ளார். மழைக்கு ஒப்புமைப்படுத்தி பாரியின் கொடைத்தன்மையைக் கூறுவர். ஏனெனில் மழையானது உலகத்து உயிர்கள் எல்லாரும் இன்புறும்படி வேண்டிய இடம், வேண்டாத இடம் என்று எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி பெய்யும். அதைப்போல பாரியும் பாரபட்சமின்றி தன்னை நாடி வந்தவர்களுக்கு பொன்னும் பொருளும் வழங்குவான்.

"கடவன், பாரி கை வண்மையே" (புறநானூறு .,106:5)

"பாரி ஒருவனும் அல்லன்:

மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே" (புறநானூறு.,107:3 - 4)

இக்கருத்தை வள்ளுவரும்

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு

என்னாற்றுங் கொல்லோ உலகு" (திருக்குறள்.211)

என்ற குறளடிகளில் வலியுறுத்துகின்றார்.

## ஆய் அண்டிரன் கொடைப்பண்பு

ஆய் அண்டிரன் கடையேழு வள்ளல்களுள் ஒருவன். இவன் நாகம் வழங்கிய அரிய ஆடையை சிவபெருமானுக்கு அளித்தவன். மறுமைப்பயன் பற்றிய நம்பிக்கை மக்களிடையே காணப்படும் மறுமைப்பயன் என்பது இப்பிறவியில் அறச்செயல்கள் செய்தால் அப்புண்ணியம் மறுபிறவியில் வந்து சேரும் என்பது பண்டைத்தமிழர்களின் நம்பிக்கை. பயன் கருதி நற்செயல் செய்யும் செயல்களில் ஈகை அடங்காது. அவ்வாறு பயன்கருதி பரிசில் அளிப்பது ஒரு வணிகம் ஆகும். அது அற விலை வணிகன் செயலாகும். இந்தப் பிறவியில் கொடையளித்தால் அது நமக்கு நன்மை கிட்டும் என்ற நோக்கில் பரிசில்களை ஆய் அண்டிரன் வழங்குவதில்லை. இதனை,

"அற விலை வணிகன் ஆஅய் அல்லன்

பிறரும் சான்றோர் சென்ற நெறி என" (புறநானூறு.,134:2 - 3)

என்ற அடிகள் வலியுறுத்துகின்றன. இதனைத் திருக்குறளும்

"வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்

குறியெதிர்ப்பை நீரதுடைத்து" (திருக்குறள்.,221)

கூறுகின்றன.

## புறாவின் துன்பத்தை தீர்த்தல்

சிபி சக்கரவர்த்தி சோழ நாட்டில் தன்னை நாடி வந்தவர்களை புரக்கும் தன்மையுடையவர்கள் வள்ளல் ஆவார். புறா ஒன்றை பருந்து ஒன்று தன் இரைக்காக துரத்தி வந்தது. அந்தப் புறாவானது சிபி சக்கரவர்த்தி என்பானிடம் சரணடைந்தது. தன்னை நாடி வந்தது ஒரு அஃறிணை உயிரினமாக இருந்தாலும் அதை இழிவுபடுத்தாமல் அவற்றைப் பாதுகாத்தான். அதுமட்டுமின்றி உணவுக்காக வந்த பறவைக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்று எண்ணி தன் உடலில் உள்ள தசைப்பகுதியை அப்புறாவிற்கு ஈடாகக் கொடுத்தான் என்பது வரலாறு.

## நீர்நிலைகளை உருவாக்குதல்

'நீரின்றி அமையாது உலகு' என்று வள்ளுவர் வாக்கிற்கிணங்க நீரின்றி இவ்வுலக உயிரினங்கள் வாழ முடியாது. எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆதாரமாக அமைவது நீராகும். இவ்வுலகம் பெரும்பான்மை கடலால் சூழப்பட்டிருப்பினும் நீரின்றி மக்கள் உயிர் வாழ முடியாது. நீர் மனிதன் வாழ அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகும். நீர் தேவையாக இருந்ததால் ஒவ்வொரு ஊருக்கும் அணியாக நீர்த்துறைகள் விளங்கியது. இதனை

"கூதிர் ஆயின் தண்கலிழ் தந்து

வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்

யாறுஅணிந் தன்றுநின் ஊரே" (ஐங்குநுறாறு,45:1 - 3)

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

மேலும், உயிர்கள் வாழ மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் என்று நன்னீர் நீர்நிலைகளும் வேண்டும். என்பதை புலவர்கள் உணர்ந்திருந்தனர். அதனால் பிறருக்கு பயன்படக்கூடிய நீர்நிலைகளை அமைக்க மன்னனுக்கு வலியுறுத்தினர். இதனை,

"நிலன் நெளிமருங்கில் நீர்நிலை பெருகத்

தட்டோர் அம்ம இவண்" (புறநானூறு,18:28 - 29)

என்ற அடிகளில் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு குடபுலவியனார் கூறியுள்ளதை அறிய முடிகிறது. மேலும், காட்டை அழித்து நீர்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பதை,

"காடு கொன்று நாடு ஆக்கி

குளம் தொட்டு வளம்பெருக்கி" (பட்டினப்பாலை:283 - 284)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

## நட்பு

யாருடன் நட்பு கொள்ள வேண்டும் யாருடன் நட்பு கொள்ளக் கூடாது என்பதை சோழன் நல்லுருத்திரன் கூறுகின்றார். முயற்சியில்லாமல் தனக்கு என்று வாழும் உள்ளமுடைவர்களின் நட்பை கைவிட வேண்டும். விடா முயற்சியையும் உயர்ந்த குறிக்கோளையும் உடையவரின் நட்பை பெற வேண்டும் என்று எலி, புலி இவற்றின் செயல்களோடு ஒப்பிட்டு கூறியுள்ளார். எலி வயலில் விளைந்த நெல்லை தன்னுடைய சிறிய முயற்சியால் சேகரித்து, அவற்றை பிறர் அனுபவிக்காவிடாமல் பாதுகாத்து வைக்கும். இவ்வாறு எண்ணம் உடையவர்களின் நட்பை விட வேண்டும். புலி எவ்வளவு பசித்தாலும் தான் வீழ்த்திய இரை இடப்பக்கம் வீழ்ந்தால் அவற்றை உண்ணாது. விடாமுயற்சியுடன் மறுநாளும் சென்று இரையை தேடி வலப்பக்கம் வீழுமாறு களிற்றை கொன்று உண்ணும் தன்மையுடையது. இத்தகைய உயர்ந்த வலிமையுடையவரின் நட்பை பெற வேண்டும் என்று கூறுவதை

"புலி பசித்தன்ன மெலிவு இல் உள்ளத்து

உரனுடையாளர் கேண்மையொடு

இயைந்த வைகல் உள ஆகியரோ!" (புறநானூறு, 190:11 - 12)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. அதுமட்டுமின்றி பாரி - கபிலர், கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் என்று மன்னன் புலவர்களிடையே உண்மையான நட்பு நிலவியதை சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது. பாரி இறந்தவுடன் நிற்கதியாக இருந்த பாரிமகளிரை தம் மகள்கள் போல் பாதுகாத்தார் கபிலர். அவர்களுக்கு திருமணம் முடிப்பதற்காக அவர்களின் வேளிர் இனமான மன்னர்களிடம் சென்று பாரி மகளிரை மணமுடிக்க கூறி சென்றதாக இலக்கியம் கூறுகின்றது.

## போர் அறம்

புறவாழ்க்கையில் வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தனர். போரில் கூட அறநெறிகள் பின்பற்றப்பட்டன. புறமுதுகு காட்டக்கூடாது. ஆயுதம் அல்லாதவனை கொல்லோ அவனோடு சண்டையிடவோ கூடாது, போர் நடப்பதற்கு முன் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அறநெறியோடு போர்புரிந்தனர். ஒவ்வொரு ஆடவனும் போரில் விழுப்புண் பட்டு இறப்பதை பெருமையாகவும் பேறாகவும் கருதினர். புறப்புண் பட்டுவிட்டால் அதனை இழிவாக கருதி மானத்தை பெரிதாக நினைத்து உயிர் துறந்ததை புறநானூறு பறை சாற்றுகின்றது.

## முடிவுரை

சங்க காலத்தில் விருந்தோம்பல் பண்பு, கொடையளித்தல், போன்றவை சங்க கால மக்களின் பழக்க வழக்கங்களையும் மாண்பையும் வெளிப்படுத்தியிருப்பினும் இவையெல்லாம் மனித நேயத்தின் வெளிப்பாடே என்று கூறலாம். நம் முன்னோர்களின் இந்த மாண்பை நாம் பின்பற்றாமல் மனிதநேயத்தை தொலைத்து விட்டதால் சொத்து சேர்த்தல், கொலை, கொள்ளை போன்ற அநீதிகள் நடைபெறுகின்றன. எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்து விட்டால் (சமவுடைமை) நிலவினால் எவ்வித இன்னலும் நடைபெறாது.

## References

தட்சிணாமூர்த்தி, அ. (2004) ஐங்குறுநூறு(தொகுதி - 1). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.

பாலசுப்பிரமணியன், கு.வெ. (2004) புறநானுறு (தொகுதி - 1). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை,

பாலசுப்பிரமணியன், கு.வெ. (2004). நற்றிணை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை

மோகன், இரா. (2004). பத்துப்பாட்டு பகுதி 1. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை

மோகன், இரா. (2004). பத்துப்பாட்டு பகுதி 2. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை

வரதராசனார், மு. (2004) திருக்குறள் தெளிவுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை,

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License